தமிழ்நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, 1974 மார்ச் 6.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு

முன்னாள் உறுப்பினர்கள் திரு. எம். ஏ. முகமது இப்ராஹிம், திரு. எம். இராசா அய்யர் ஆகியோர் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1946-ஆம் ஆண்டு முதல் 1952-ஆம் ஆண்டு வரை அன்றைய ஒருங்கிணைந்த தமிழ் நாடு சட்டப் பேரவையில், தஞ்சாவூர் முகமதியர் நாட்டுப்புறத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, உறுப்பினராக இருந்த திரு. எம். ஏ. முகமது இப்ராஹிம் அவர்கள் 24—1—1974-ம் நாளன்று மறைந்ததைக் குறித்தும்.

மதுரை, இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, 1962-ஆம் ஆண்டு முதல் சட்ட மன்ற மேலவையில் உறுப்பினராக இருந்தவரும், 1965-ஆம் ஆண்டு ஆசிரியர்களுக்கான தேசிய விருது பெற்றவருமான திரு. எம். இராசா அய்யர் அவர்கள் 21—2—1974-ம் நாள் மறைந்ததைக் குறித்தும்,

இப்பேரவையின் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னார்களை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் இப் பேரவையின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்தவர்களுக்கு மரியாதை அளிக்கும் வகையில் எல்லோரும் ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.)